

இராமநாபுரம் மாவட்டத்தில் முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி செயலாளர் முதுகுளத்தூர் சட்டமன்றதொகுதி பொறுப்பாளர் சி.வேல்முருகன் முன்னிலையிலும் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலை கழகத் தலைவர் கரங்களை வலுப்படுத்தி தமிழ்நாட்டின் 234 சட்டமன்ற தொகுதிகள் வென்றெடுக்கும் முனைப்போடு 12. 11 .2024 மு.க.ஸ்டாலின் அன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் கீழக்குளம் கிராமத்தில் உள்ள திருமண மஹாலில் முதுகுளத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.சண்முகம் ஏற்பாட்டில் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட முதுகுளத்தூர் மேற்கு ஒன்றிய கழகம் சார்பாக கிளை செயலாளர் பாகம் முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கு கூட்டம் நடைபெற்றது. முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியத்தில் உள்ள கிளை கழக செயலாளர்கள் ,பிரதிநிதிகள், BLA2 ,BLAc, பொறுப்பாளர்கள் மற்றும் முதுகுளத்தூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் பிற அணிகளின் நிர்வாகிகளும் கலந்து சிறப்பித்தனர் . இந்நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தமிழ்நாடு உணவகத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் ஆய்வு பணி மேற்கொண்டார். அப்போது அங்கு உணவு அருந்திக் கொண்டிருந்த சுற்றுலா பயணிகளிடம் உணவின் தரம் குறித்து கேட்டறிந்தார்.அதற்கு அவர்கள் உணவு தரமாகவும்,நல்ல ருசியாகவும் உள்ளது என்று தெரிவித்தனர்.உடன் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன் தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன், துணை மேயர் ராஜ் உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள் உள்ளனர்.தொடர்ந்து அங்குள்ள அறைகளையும் அமைச்சர் இராஜேந்திரன் பார்வையிட்டார்.

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!



இராணிப்பேட்டை, நவ. 14-

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வரும் 16.11.2024 சனிக்கிழமை மாலை 5.00 மணி அளவில் இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி தலைமையில் இராணிப்பேட்டை மாவட்டக் கழக அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) கூட்டம் நடைபெறும்.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

பொருள் : 1.கழக இளைஞரணி செயலாளர், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா (27.11.2024) குறித்து,

2. வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் சிறப்பு முகாம்,

3. BLC கூட்டம்,

4. கழக ஆக்கப் பணிகள் குறித்து,

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பள்ளி மாணவிகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களைத் தடுத்திட -

# மாணவர்கள் பாதுகாப்பு ஆலோசனைக் குழு - 'மாணவர் மனசு' புகார் பெட்டி!

## பள்ளிக் கல்வித் துறையின் விழிப்புணர்வு நடவடிக்கைகள் – பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் அறிவிப்பு!

சென்னை, நவ. 13 -

பள்ளி மாணவிகளுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல்களைத் தடுத்திட அரசு மேற்கொண்டு வரும் முனைப்பான நடவடிக்கைகள் அனைத்து பள்ளிகளிலும் மாணவர்கள் பாதுகாப்பு ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்றும் மாணவ, மாணவியர் புகார் தெரிவிக்க பாடநூல்களின் பின்புற அட்டைகளில் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் தெரிவிக்கப்படும் என்றும் பள்ளிகளில் மாணவர் மனசு புகார் பெட்டி வைக்கப்படும் என்றும் மாணவ மாணவியர்களிடம் ஒழுங்கீனமாக நடப்பவர்கள் மீது காவல் துறை நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பள்ளிக்கல்வித் துறை விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

அதன் விபரம் வருமாறு :-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற பள்ளி மாணவிகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சார்ந்து பள்ளி நிர்வாகி மற்றும் பள்ளி முதல்வர் மீது காவல் துறையால் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட 2 பள்ளிகளுக்கு அரசால் சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டு பள்ளி நிர்வாகம் சிறப்பு அதிகாரிகளின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் பள்ளி மாணவிகளுக்கு நடைபெற்ற பாலியல் துன்புறுத்தல் காரணமாக பள்ளி நிர்வாகி, முதல்வர் மற்றும் சார்ந்த ஆசிரியர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளி மாணவ / மாணவிகளுக்கு எதிரான செயல்பாடுகளை தடுக்கும் பொருட்டு ஒவ்வொரு பாடப்புத்தகத்தின் பின்பக்க அட்டையில் 14417, 1098 போன்ற கட்டணமில்லா தொலைபேசி எண்கள் கொடுக்கப்பட்டு, பாலியல் துன்புறுத்தல் சார்ந்த விவரங்களை புகார் அளிக்க மாணவ / மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு மாணவர்கள் பாதுகாப்பு ஆலோசனைக் குழு SSAC Student safeguarding advisory committee குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் மாதம் ஒருமுறை இக்குழு கூடி மாணவிகளுக்கெதிரான புகார் ஏதும் பெறப்படின் அதுசார்ந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு பள்ளியிலும் “மாணவர் மனசு” என்ற புகார்ப் பெட்டி வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள SSAC குழு உறுப்பினர்களுக்கு போக்சோ சட்டம் குறித்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் வாயிலாக பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிகளிலிருந்து மாணவ/மாணவியர்களை NSS, NCC, Scout & Guide, JRC போன்ற அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் காரணமாக பள்ளியை விட்டு வெளியே மாவட்ட அளவிலோ அல்லது மாநில அளவிலோ அழைத்துச் செல்ல நேரிடும்பொழுது ஒவ்வொரு மாணவ, மாணவியரின் பெற்றோரிடமும் தனித்தனி யாக எழுத்துப்பூர்வமாக அனுமதி பெற்று அதன் பிறகு மாவட்டக் கல்வி அலுவலரிடம் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாவட்டக் கல்வி அலுவலரின் முன் அனுமதியின்றி மாணவ, மாணவியரை பள்ளியை விட்டு வெளியே அழைத்துச் செல்லக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாணவ/மாணவியரை வெளியே அழைத்துச் செல்லும் பொழுது 10 மாணவர்களுக்கு ஒரு ஆண் ஆசிரியர் எனவும் 10 மாணவிகளுக்கு ஒரு பெண் ஆசிரியை எனவும் உடன் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மாணவர்/மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் ஆசிரியர்கள், ஆசிரியைகள் உடன் செல்ல வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக்கண்காணிப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள பள்ளிக்கல்வித் துறையைச் சார்ந்த இயக்குநர்கள்/இணை இயக்குநர்கள் மாவட்டங்களுக்கு ஆய்வுக்கு செல்லும் பொழுது மேற்கண்ட பணிகளை கண்காணித்து தொடர் நடவடிக்கைகள் எடுக்க அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பள்ளிக் குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்களிடம் ஒழுக்கக்கேடான முறையில் நடந்து கொள்பவர்கள் மீது காவல் துறை வாயிலாக குற்றவியல் நடவடிக்கை எடுப்பதுடன் துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் தெரிவித்துள்ளார்.

# திருப்பெரும்புதூர் ஏ.கோதண்டம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 14-

திருப்பெரும்புதூர் ஏ.கோதண்டம் அவர்களின் மறைவுக்கு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் ஏ.கோதண்டம் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக முன்னோடியான கோதண்டம் அவர்கள், கழகத் தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயல்பட்டவர். 1989 மற்றும் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, திருப்பெரும்புதூர் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் திறம்பட மக்கள் பணி ஆற்றியவர்.

அவரை இழந்து வாடும் அவரது அன்பு மகன் – குன்றத்தூர் நகரத் தி.மு.கழகச் செயலாளரும் குன்றத்தூர் நகர்மன்றத் தலைவருமான தம்பி கோ.சத்தியமூர்த்தி அவர்களுக்கும், அவரது குடும்பத்தார்க்கும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும், திருப்பெரும்புதூர் தொகுதி மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர்,அரசு ஊழியர்கள் மீது திடீரென கரிசனம் காட்டி பேசி வரும் எடப்பாடி பழனிசாமிக்கு கண்டனம்!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை நவ. 14-

இதுகுறித்து தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை வருமாறு:

ஆசிரியர்,அரசு ஊழியர்களின் கோரிக்கைகளில் ஒன்றைக் கூட திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும்,தேர்தல் வாக்குறுதி எண்களை எல்லாம் சொல்லி அவற்றை நிறைவேற்றவில்லை என்றும் ஊடகங்களில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி திடீரென எங்கள் மீது அக்கறை கொண்டு பேசியிருப்பது மிகுந்த வேதனையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

கடந்த 10ஆண்டுகள் ஆட்சி செய்துவிட்டு, எங்களின் பல்வேறு கோரிக்கைகளைச் செவிமடுத்து கூடக் கேட்காமல் முடக்கி விட்டு,அதன் விளைவாக இன்று எதிர்க்கட்சி தலைவராக உள்ள எடப்பாடி பழனிசாமி எவ்வாறு இப்படித் திடீர் பாசம் எங்கள் மீது கொள்கிறார் என்பது வியப்பாக உள்ளது.

எடப்பாடி பழனிசாமி அவர்களே!

நாங்கள் தற்போது கேட்கும் கோரிக்கைகள் அனைத்தும் தங்கள் ஆட்சி காலத்தில் தங்களால் முடக்கப்பட்டவையே!

அகவிலைப்படி உயர்வை முடக்கிவிட்டுப் போனது யார்?

சரண் விடுப்பு ஒப்படைப்பை முடக்கிவிட்டுப் போனது யார்?

உயர்கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வை முடக்கிவிட்டுப் போனது யார்?

பழைய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்த பல்வேறு குழுக்களை அமைத்து பல ஆண்டுகள் அலைகழித்து கடைசியில் அம்போ என எங்களை விட்டுவிட்டுப் போனது யார்?

கடந்த கால ஆட்சியிலே நியாயமான கோரிக்கைகளுக்காக நாங்கள் போராடிய போது எங்கள் மீது தற்காலிகப் பணியிடை நீக்கம்,இடம் மாறுதல், கைது வழக்கு என்று பல்வேறு பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது யார்?

தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களின் ஊதியத்தைக் கொச்சைப் படுத்திப் பேசியது யார்?

ஆசிரியர் அரசு ஊழியர்களின் ஊதியத்தைப் பக்கம் பக்கமாகப் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்து எங்களைப் பழி வாங்கியது யார்?

எல்லாம் நீங்கள் தானே... உங்களை எப்படி அரசு ஊழியர்,ஆசிரியர் இனம் மறக்கும்.

இன்று திடீரென நீங்கள் எங்கள் மீது கொண்டிருக்கிற பாசத்தை நம்புவதற்கு யாரும் இங்கு தயாராக இல்லை.

திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போது அமைகிறதோ அப்பொழுதுதான் ஆசிரியர்,அரசு ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேறியது என்பது வரலாறு.

ஊதியக்குழு மாற்றங்கள் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் அமல்படுத்தப்பட்டது.

ஆசிரியர்,அரசு ஊழியர்களுக்கான குடும்ப நல நிதியை அமல்படுத்தித் தற்போது அதை 5 லட்சமாக உயர்த்தி வழங்கியது தி.மு.க. ஆட்சியில் தான்.

மகப்பேறு விடுப்பை ஓர் ஆண்டாக மாற்றி வழங்கியது தி.மு.க. அரசு தான்.

ஒற்றைக் கையெழுத்தில் 53 ஆயிரம் தொகுப்பூதிய ஆசிரியர்களைக் காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டு வந்தது தி.மு.க.வின் கலைஞர் அரசு.

உயர்கல்விக்கான ஊக்க ஊதிய முறையைக் கொண்டு வந்தது தி.மு.க. அரசு.

இப்படி எண்ணற்ற திட்டங்களை ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள்.

தாங்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆசிரியர் அரசு ஊழியர் சங்க பிரதிநிதிகளைச் சந்திக்கவே மறுத்தீர்கள் உங்களைச் சந்திப்பதற்காகவே நாங்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி இருந்தது.

ஆனால் இன்றைய முதல்வர் பலமுறை எங்களை நேரில் அழைத்துப் பேசியிருக்கிறார், எங்கள் கோரிக்கைகளைச் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

நான் செய்யாமல் யார் செய்வது... என்று ஒவ்வொரு முறையும் எங்களிடம் உறுதிமொழி அளித்துக் கொண்டிருக்கிறார்.

நீங்கள் ஏற்படுத்தி விட்டுச் சென்ற கடுமையான நிதி நெருக்கடியைச் சரி செய்து தேர்தல் அறிக்கையில் அறிவித்தவற்றை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்.

சில தினங்களுக்கு முன்பாகக் கூட ஆசிரியர்,அரசு ஊழியர்களின் அத்தனை கோரிக்கைகளும் தேர்தலுக்கு முன் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்.

சொன்னதைச் செய்பவர்கள், ஏன் சொல்லாததையும் செய்பவர்கள்,

அதனடிப்படையில் நிச்சயம் பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட எங்களுடைய அத்தனை கோரிக்கைகளும் விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிறையவே இருக்கிறது.

விரைவில் அவற்றையெல்லாம் நிறைவேற்றுவார்.

ஒட்டுமொத்த ஆசிரியர், அரசு ஊழியர்கள் அவருக்கு மீண்டும் மிகுந்த ஆதரவளித்து வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் அவரை மீண்டும் ஆட்சி கட்டிலில் பெரும்பான்மையான ஆதரவோடு அமர வைப்போம்.

வீணாக யாரும் கனவு காண வேண்டாம்,

குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க ஆசைப்பட வேண்டாம்.

இவ்வாறு கு.தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பாபு ஜனார்த்தனன்

### நவம்பர் 14 (1989)



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றினார். பின்னர் தி.மு.க. ஆரம்பித்தவுடன் கழகத்தில் இணைந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பினை பெற்றவர்.

1978ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளராக பணியாற்றியவர்.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் செய்யாறு தொகுதியில் போட்டியிட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் மற்றும் ஈரோடு வடக்கு, தெற்கு - கரூர் - நீலகிரி - சேலம் கிழக்கு, மேற்கு, மத்திய - நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் - ஈரோடு, சேலம் மாநகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் ஈரோடு வடக்கு, தெற்கு கரூர் நீலகிரி – சேலம் கிழக்கு, மேற்கு, மத்திய -நாமக்கல் கிழக்கு, மேற்கு ஆகிய மாவட்ட மற்றும் ஈரோடு, சேலம் மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் வருகிற 18-11-2024 திங்கட்கிழமை, காலை 10.00 மணி அளவில் ஈரோடு மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயத்தில்” எனது தலைமையிலும் – கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ், எம்.பி., ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ். முத்துசாமி – ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைத் தலைவர் மா.மதிவேந்தன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் ஈரோடு வடக்கு, தெற்கு கரூர் நீலகிரி சேலம் கிழக்கு, மேற்கு, மத்திய நாமக்கல் கிழக்கு, மேற்கு ஆகிய மாவட்ட மற்றும் ஈரோடு, சேலம் மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : நவம்பர் 27 – தமிழ்நாடு துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள்

அணியின் வளர்ச்சி ஆக்கப் பணிகள் – குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 600 018
நாள்– 12.11.2024

ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு